செ.வெ.எண்:27 நாள்:19.01.2018

# அம்மா இருசக்கர வாகன திட்டம் கரூர் மாவட்டத்தில் செயல்படுத்துவது குறித்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆலோசனைகூட்டம் இன்று(19.01.2018) நடைபெற்றது.

கரூர் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் தமிழக அரசு அம்மா இருசக்கர வாகனதிட்டத்தின் கீழ் கரூர் மாவட்டத்திலுள்ள உழைக்கும் பெண்களுக்கு வழங்கிட வழிகாட்டும் நெறிமுறைகள் குறித்த உயர் மட்ட ஆலோசனைக்கூட்டம் மாவட்டஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது.

தொலைநோக்கு பார்வைகொண்ட மறைந்த முன்னால் முதலமைச்சர் அவர்கள் பெண்கள் தங்கள் பணியிடங்களுக்கு செல்வதில் உள்ள சிரமங்களை உணர்ந்து பணியிடங்களுக்கும் பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் இருசக்கரவாகனங்கள் வழங்க 50 சதவீதம் மாணியம் அல்லது ரூ-25000 இவற்றில் எதுதுறைவோ அத்தொகையினை 01.01.2018 முதல் ஒரு இலட்சம் உழைக்கும் மகளிருக்கு வழிகாட்டும் நெறிமுகைளுக்கு உட்பட்டு வழங்கிடவும் இத்திட்டத்தினை ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வாயிலாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதில் கரூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக 1536 மகளிருக்கு வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தில் பயண்பெற விரும்புவோர் எதிர்வரும் 22.01.2018 முதல் 05.02.2018 வரை காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணிவரை விண்ணப்பங்யகள் பெற்று விண்ணப்பிக்கலாம். விண்ணப்படிவத்துடன் பணிபுரிவதற்கான சாண்றுகள் ஓட்டுநர் உரிமம், இருப்பிட சாண்று, கடவுச்சீட்டு அளவுள்ள புகைப்படம், வயதுசாண்று உள்ளிட்டவற்றுடன் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து நேரிலோ, பதிவு அஞ்சலிலோ அல்லது விரைவு தபாலிலோ அனுப்பிவைக்கலாம்.

அணைத்து பேரூராட்சி, நகராட்சி, வட்டாரவளர்ச்சி அலுவலகங்களிலும் தனிபிரிவு அமைக்கப்பட்டு விண்ணப்பங்கள் வழங்கபடும். கிராம மற்றும் நகர கதுதிகளில் தகுதியயானவர்களளை தேர்வு செய்திட மாவட்ட ஆட்சியர் அவர்களை தலைமையாக கொண்டு தேர்வுகுழு அமைக்கப்பட்டுள்ளது.கரூர் மாவட்டத்திலுள்ள பணிகளுக்கு செல்லக்கூடிய 18 முதல் 40 வயதுடைய ஆண்டு வருமாணம் ரூ-2.50 இலட்சம் உடைய பெண்கள் விண்ணப்பித்து பயண்பெறலாம் இத்திட்டம் எதிர்வரும் 24.02.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சென்னையில் தொடங்கிவைக்கப்படவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட முகமை இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, மகளிர் திட்ட திட்ட இயக்குநர் திரு.பாலகணேஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.செந்தில் அணைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கரூர்.**